ஓர் ஆட்சி, நல்லாட்சி நடக்கும்; நடக்கவேண்டும். அதற்காகத்தான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றிருக்கின்றார்கள். ஆகவே, இந்தளவில்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய எண்ணம், சிந்தனை ஆகியவை இருக்கின்றன. அவர்கள் என்னிடம் எதிர்பார்ப்பதும் இதுவாகத்தான் இருக்கும். இவற்றை நாம் அனைவரும் இணைந்து சிறப்பாகச் செயல்படுவோம். தமிழக மக்களை எல்லா வகையிலும் காப்பாற்றுகின்ற ஒரு நல்ல முதல்வர் கிடைத்திருக்கின்றார். அவருக்கு மீண்டும் ஒரு முறை நன்றி. இந்த அவை உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி எனக்கூறி அமர்கிறேன். நன்றி வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது உரையின் தொடக்கத்தில் ** என்றேன். அல்ல, நேற்றிரவு நான் dictate செய்து, அவர் தயாரித்துக் கொடுத்த உரையென அதனை மாற்றிக்கொள்ளலாம். ஊடகங்கள் அவ்வாறே அதனை மாற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். நேற்றிரவு 9–00 முதல் 9–30 மணி வரையில் நாங்கள் இருவரும் discuss செய்துதான் அந்த உரையைத் தயாரித்தோம்.

5. அரசினர் தீர்மானம்

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: அதுதான், தீர்மானத்தை நீங்களே சொல்லிவிட்டீர்களே! மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“பேரவை விதி 25 (1)–ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2021 மே 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை நண்பகல் 12–00 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

– – – – –

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS